Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 223/2024** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **முருகன்** |
| Husband's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**02.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை வேல்முருகன் காலனியில் குடியிருந்து சமையல் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எனது மச்சானான அசா.1 சூர்யநாராயணனின் இருசக்கர வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **( பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** கடந்த 08.10.2024ம் தேதி பகல் 11.00 மணிக்கு நானும், எங்க தெருவை சேர்ந்த முத்தரசன் என்பவரும் அருப்புக்கோட்டை பெந்தெகோஸ்தே அருக நின்று பேசி கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டை நகர் போலீசார் குற்ற எண். 303/2024 வழக்கில் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும் முத்தரசனும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 223/2024** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **முத்தரசன்** |
| Husband's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**02.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தீர்த்தக்கரையில் குடியிருந்து உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அசா.1 சூர்யநாராயணனின் இருசக்கர வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **( பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** கடந்த 08.10.2024 ம் தேதி பகல் 11.00 மணிக்கு நானும், எங்க தெருவை சேர்ந்த முருகன் என்பவரும் அருப்புக்கோட்டை பெந்தெகோஸ்தே அருக நின்று பேசி கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டை நகர் போலீசார் குற்ற எண். 303/2024 வழக்கில் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும் முருகனும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**